**தேதி :** 03.09.2025 **CC.No. :** 111/2021 PW :1 சரண்யா

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் குடும்பத்தில் கடைசி மகள் என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகளுக்கு திருமணம் நடைபெற்ற பிறகு தான் எனக்கு திருமணம் நடைபெற்றது. எனது சகோதரி கவிதாவுக்கும், எதிரிக்கும் நடைபெற்ற திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். கவிதாவுக்கு என் பெற்றோர்கள் நகை போடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய திருமணத்திற்கு எதிரியும், அவர் மனைவியும் உதவி செய்தார்கள் என்றால் சரியல்ல.

எதிரியும், அவரது மனைவியும் திருமணமான நாளில் இருந்து என்னுடைய பெற்றோர்களை பராமரித்து அவர்களுடன் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2012 க்கு பிறகு எதிரியின் பிள்ளைகளை படிக்க வைக்கவேண்டும் என எதிரி குடும்பத்தினர் என் அம்மாவுடன் தங்கியிருந்தார்கள். எதிரியின் மனைவிக்கு என் பெற்றோர் நகை போடாததினால் என் அம்மாவின் இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா 2016 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு என் அம்மா குடியிருந்து வந்த வீடு பழுதாகிவிட்டதினால் வேறு வீடு கட்ட வேண்டும் என நாங்கள் நினைத்தோம்.

தற்போது, அந்த இடத்தில் வீடு கட்டி அம்மாவும், நானும், என் சகோதரி சுமதியும் குடியிருந்து வருகிறோம். எதிரியும், அவரது மனைவியும் அங்கு குடியிருக்கவில்லை. எதிரி என் திருமணத்திற்கு செலவு செய்த பணம் ரூ.50,000/–மும், என் தந்தையிடம் அந்த இடத்திற்காக எதிரி கொடுத்த பணம் ரூ.50,000/–மும் சேர்த்து அந்த இடத்தில் எதிரி கட்டியிருந்த வீட்டிற்கான இழப்பீடும் சேர்த்து ரூ.3,20,000/– நாங்கள் கொடுக்க வேண்டும் எனவும், அவ்வாறு கொடுத்தால் எதிரி வீட்டை காலி செய்து தரலாம் எனவும் எதிரி எங்களிடம் கேட்டார் என்றால் சரியல்ல.

கண்ணன் என்பவர் என்னுடைய கணவர் என்றால் சரிதான். 10.07.2017 அன்று நானும், என் கணவரும் எதிரி கட்டியிருந்த இலவச கழிப்பறையை இடித்து அவதூறாக பேசியதினால், கடையநல்லூர் காவல்நிலையத்தில் எதிரியின் மனைவி கவிதா புகார் கொடுத்திருந்தார் என்றால் அந்த புகார் பொய் புகார் ஆகும். அந்த புகார் மீது என்னை போலீசார் விசாரித்து, கண்டித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். கவிதா மீண்டும் எங்களிடம் பணம் கேட்ட பிறகும் நாங்கள் கொடுக்காமல் இருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவ நாளில் நான் என்னுடைய அம்மா வீட்டு தெருவிற்கு பக்கத்து தெருவில் குடியிருந்து வந்தேன். நான் என் வீட்டிலிருந்து அம்மா வீட்டிற்கு வந்திருந்தபோது சம்பவம் நடந்தது.

சம்பவ காலக்கட்டத்தில், சுமதி சென்னையில் குடியிருந்து வந்தார் என்றால் 6 மாதமாக என் அம்மாவுடன் தான் அவர் இருந்தார். நான் சம்பவநாள் எதற்காக என் அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் என்னுடைய அம்மா அந்த இடத்தில போர் போட்டிருந்தார், அதனை பார்க்க

சென்றேன். சம்பவம் நடந்தது இரவு நேரம் என்றால் 07.30 மணியிருக்கும். சம்பவயிடத்தை சுற்றிலும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தில் உள்ள நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் எத்தனை பேர்கள் வந்தார்கள் என்றால் அந்த தெருவில் உள்ள நபர்கள் வந்தார்கள். 20 பேர்கள் வந்திருப்பார்களா? என்றால் வந்திருப்பார்கள். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 5, 10 நிமிடத்தில் எதிரி எங்களை வெட்டி விட்டு சென்று விட்டார். எதிரி எங்களை வெட்டிய ஆயுதத்தை அவர் கையில் எடுத்து சென்றார்.

சம்பவம் நடந்தவுடன் நாங்கள் காவல்நிலையம் செல்லவில்லை. நேரே மருத்துவமனைக்கு சென்றோம். சம்பவம் நடந்து அரை மணிநேரம் நான் சம்பவயிடத்தில் ஆட்டோ கிடைக்காததினால் இருந்தேன். பின்னர் தான் மருத்துவமனை சென்றேன். நாங்கள் மருத்துவமனை சென்ற சிறிது நேரத்திலேயே போலீசார் அங்கு வந்தார்கள். மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்ததை தவிர, பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் என் அம்மா கொடுத்தார்களா? என்றால் என் அம்மாவிடமும் கேட்டார்கள். என்னிடமும் கேட்டார்கள்.

எனக்கு ஏற்பட்ட காயங்கள் அரிவாள் தாக்குதலால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக உள்ள பாகப்பிரிவினை பிரச்சனை காரணமாக எதிரியின் மனைவி அடிக்கடி எங்கள் மீது காவல்நிலையத்தில் புகார்

கொடுத்ததினாலும் காழ்ப்புணர்ச்சி கொண்டு, எதிரியை பழிவாங்க இருசக்கரவாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தை வைத்து பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **–**

**இல்லை.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.04 19:09:38 +0530

**தேதி :** 03.09.2025 **CC.No. :** 111/2021 PW :**2** கிருஷ்ணம்மாள்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் அதனை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். எதிரிக்கும், எனது மகளுக்கும் காதல் திருமணம் நடந்தது என்றால் என்னுடைய மகள் எதிரியுடன் சென்று விட்டார். நான் திருமணத்திற்கு நகைகள் போடவில்லை என்றால் சரிதான். திருமணமான காலக்கட்டத்தில் இருந்து எதிரியும், அவரது மனைவியும் என்னை பராமரித்து வந்து என்னுடன் தங்கியிருந்தார்கள் என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு அவர்களுடைய குழந்தைகளை படிக்க வைப்பதற்காக என்னுடன் தங்கியிருந்தார்கள். எதிரி அந்த இடத்தில் குடியிருக்க ரூ.50,000/− என்னுடைய கணவருக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கியிருந்தேன். அதனை திரும்ப கொடுத்து விட்டேன்.

என்னுடைய மகள் சரண்யாவின் திருமணத்திற்காக எதிரி ரூ.50,000/− தந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் இறந்தபிறகு என்னுடைய வேறு 2 மகள்களும் பாகப்பிரிவினை கேட்டார்கள் என்றால் நான் தான் என்னுடைய வீட்டை மதிப்பீடு செய்து மற்ற மகள்களுக்கும் பாகம் கொடுக்க நினைத்தேன். எதிரி ரூ.3,20,000/− அவர் செலவளித்த தொகையை எங்களிடம் கேட்டார் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை பிரச்சனைக்கு பிறகு எதிரிக்கும், எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான்.

2017 ம் வருடம் எதிரியின் மனைவி கவிதா அவருடைய கழிவறையை நாங்கள் இடித்ததாகவும், அவதூறான வார்த்தைகள் பேசி அடித்ததாகவும் கடையநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் போலீசார் விசாரணையில் நான் இறந்த பிறகு தான் அந்த வீட்டிற்கு செல்ல வேண்டும் என கவிதாவை அறிவுறுத்தினார்கள். எங்களை கண்டித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. தற்போது என்னுடைய இடத்தில் சுமதியும், சரண்யாவும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரியும், கவிதாவும் குடியிருக்கவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவக்காலக்கட்டத்தில் என்னுடைய மகள் சரண்யா நான் குடியிருந்து வந்த வீடு இருக்கும் தெருவிற்கு அடுத்த தெருவில் குடியிருந்து வந்தார். எதற்காக சம்பவ நேரத்தில் என் வீட்டிற்கு சரண்யா வந்தார் என்றால் நான் போர் போட்டிருந்தேன், அதை பார்ப்பதற்காக சரண்யா வந்தார். நான் இந்த விபரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேன். நான் சத்தம் கேட்டு வந்தேன் என்றால், நான் தண்ணீர் எடுத்து வரும்போது எதிரி வெட்டி விட்டு அரிவாளுடன் ஓடினார். நான் போலீசார் விசாரணையில் இவ்வாறு தான் சொல்லியுள்ளேன். நான் சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையம் சென்றேனா? என்றால் இல்லை. மருத்துவமனை சென்றோம்.

நான் சொன்னது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு சரண்யா வரவில்லை என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக உள்ள பாகப்பிரிவினை பிரச்சனை காரணமாக

எதிரியின் மனைவி அடிக்கடி எங்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததினாலும் காழ்ப்புணர்ச்சி கொண்டு, எதிரியை பழிவாங்க இருசக்கரவாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தை வைத்து பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.04 19:10:04 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 111/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW–3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுமதி | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | ராஜகோபால் | தொழில் | : | காய்கறி வியாபாரம் |
| கிராமம் | : | மாவடிக்கால் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 03rd, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மாவடிக்காலில் குடியிருந்து வருகிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். எதிரி என்னுடைய தங்கையின் கணவர். அ.சா.1 என்னுடைய தங்கை. 2019 ம் ஆண்டு ஒருநாள் என்னுடைய அம்மா அவரிடத்தில் வீடு கட்டினார். அம்மாவின் வீட்டிற்கு பின்னால் உள்ள வீட்டில் என்னுடைய தங்கை கவிதாவும், அவருடைய கணவரான எதிரியும் குடியிருந்தார்கள். கவிதாவும், சரண்யாவும் வீடு பாகம் பிரிப்பது சம்பந்தமாக சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் விலக்கி பிடித்தேன். அதனால் கீழே விழுந்தேன். அவ்வாறு எனக்கு காயம் ஏற்பட்டது. எதிரி என்னை தாக்கவில்லை. சரண்யாவிற்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.04 19:10:17 +0530